176

176

JAN 1942

319

319

கிராமத்தார் ஜெபங்கள்

PRAYERS FOR VILLAGERS

CLS

PRICE 3 PIES

கிராமத்தார் ஜெபங்கள்

PRAYERS FOR THE VILLAGERS

3/6

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)

MADRAS COLOMBO BANGALORE SECUNDERABAD

1941

புகழும் துதியும்

வல்லமையுள்ள கடவுளே! நீர் எவ்வளவு அழகாக வானத்தையும், பூமியையும், பிரகாச மான சூரியனேயும் உண்டாக்கி இருக்கிறீர். பகல் இரவு என நாளேப் பிரித்து இருக்கிறீர். குளிர்ந்த வெளிச்சமுள்ள நிலாவையும் நட்சத் திரங்களேயும் நேர்த்தியாகப் படைத்து இருக் கிறீர். பெரிய சமுத்திரங்கள்! மலேகள்! அழ கான பச்சை மரங்கள், செடிகொடிகள், பயிர் கள், வாசனேயுள்ள பூக்கள்! பலவிதப் பறவை கள், பிராணிகள் இவைகளேயும் உண்டாக்கி இருக்கிறீர். இவைகளின் மத்தியில் மனிதரை மேன்மையாகப் படைத்தீர். சுவாமி எல்லாம் அற்புதமே! நீரே மகிமையும் வல்லமையும் உள்ள கடவுள். ஆமென்.

தாழ்மையான வேலேகள் செய்கிறவர்களுக்காக ஜெபம்

"உங்களில் எவன் பெரியவனுய் இருக் கிருனே அவன் மற்றவர்களுக்கு ஊழியக்கார

ளுய் இருக்கக்கடவன்" என்று சொல்லிச் சீஷர்களுடைய கால்களைத் தாழ்மையாகக் கழுவின இயேசுவே, எங்களுக்கும் தாழ்மையைக் கற்றுக்கொடும். தாழ்மையான வேலைகளைச் செய்யும் தோட்டி, வண்ணான், அம்பட்டன், சக்கிலியன் முதலானவர்களை நாங்கள் கேவலமாய் நினைக்காமல் அவர்களை மதித்து, கனம் பண்ண புத்தி தாரும். அவர்கள் எங்களுக்குச் செய்யும் உதவிக்காகவும் அவர்கள் வேலைக்காகவும் தோத்திரம் சுவாமி. நாங்களும் உம்மைப் போல, தாழ்மையான வேலைகளை மற்றவர்களுக்காகச் செய்ய பலம் தாரும். ஆமென்.

இருதய சுத்தத்துக்காக ஜெபம்

"இருதயத்திலே சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்று சொன்ன இயேசுவே, எங்கள் மனதைச் சுத்தமாக்கும். நாங்கள் பேர்க்கிறிஸ்தவர்களாய் இல்லாமல் எங்கள் எண்ணத்திலும் பேச்சிலும் நடத்தையிலும் உண்மைக் கிறிஸ்தவர்களாய் இருக்கச் செய்யும். எங்களுக்குள்

இருக்கும் கெட்ட ஆவியை நீக்கி உம் பரிசுத்த ஆவியால் எங்களை நிரப்பும். நாங்கள் கெட்ட காரியங்களையும், கெட்ட ஆசைகளையும், பொய்யையும் வெறுக்கத்தக்க பலம் கொடும். இப்படியாக நீர் எங்கள் மனத்தில் வந்து தங்கி எங்களைச் சுத்தமாக்க வேண்டுமென்று இயேசுவின் மூலம் வேண்டுகிறோம். ஆமென்.

கிராமத்தார்களுக்காக ஜெபம்

உலகிலுள்ள எல்லாரையும் நேசிக்கும் கடவுளே! எங்கள் கிராமத்தையும் மற்ற கிராமங்களையும் நீர் ஆசீர்வதியும். இயேசு சுவாமியைப்பற்றி அறிந்து, நாங்கள் இரட்சிப்படைந்தோம். அதுபோல எங்கள் சொந்தக்காரரும் மற்றவர்களும் இரட்சிப்படையச் செய்யும். எங்களை விட்டுப் பிரிந்து இருக்கும் சிநேகிதர், சொந்தக்காரரைக் காப்பாற்றியருளும். ஏழைகள், கைம்பெண்கள், அநாதைப் பிள்ளைகள் முதலானவர்களுக்குத் துணையும் பாதுகாவலுமாயிரும். கஷ்டப்படுகிறவர்களுக்கு

நாங்கள் உதவிசெய்ய நல்ல ஆசையைக் கொடும். ஒருவரோடொருவர் சிநேகமாயும் ஐக்கியமாயும் இருக்க உதவிசெய்யும்; கல்வி அறிவை யாவரும் அடையக் கிருபைசெய்யும். இவைகளை இயேசுவின் மூலம் வேண்டுகிறோம். ஆமென்.

தைரியத்துக்காக ஜெபம்

எங்கள் சத்துருவான பிசாசை ஜெயித்துக் கீழ்ப்படுத்தின இயேசுவே! மரணத்தையும் வென்று மூன்றும் நாள் உயிரோடு எழுந்த ஜெய வீரரே! "உலகம் முடியும்வரை உங்களோடிருப்பேன்" என்று வாக்குக் கொடுத்து எங்கும் இருப்பவரே! எங்களைப் பாரும். தைரியம் இல்லாமல் இருந்த எங்களை உம்முடைய சேனையில் சேர்த்து இருக்கிறீர். இனி நாங்கள் பயப்படவேண்டியது இல்லை. நாங்கள் பிசாசுக்கும், பில்லி சூனியத்துக்கும், பட்டயத்துக்கும், விரோதிகளுக்கும் பயப்படாமல் உம்மைப் போல எதிர்த்து நின்று, ஜெயிக்கத்தக்கவர்

களாக எங்களுக்கு வல்லமை அருளும், சுவாமி. ஆமென்.

பரலோக ராஜ்யத்துக்காக ஜெபம்

எங்கள் அன்புள்ள தகப்பனே! உம்முடைய ராஜ்யம் வருவதாக. அன்பும், ஐக்கியமும், பொறுமையும் எங்களுக்குள் பெருகுவதாக. எல்லா ஜாதியினரும் ஒரே தகப்பனுடைய பிள்ளைகளைப்போல் வித்தியாசமில்லாமல் ஐக்கியமாய் ஒரே இடத்தில் கும்பிடும் காலம் வரக் கிருபை செய்யும். யாவரும் எல்லாப் பொருட்களையும் சமமாய் அனுபவிக்கும் காலத்தைச் சீக்கிரம் அனுப்பும். எல்லாருக்கும் சுதந்திரமும், சம உரிமைகளும் கொடுக்கப்படவும், மக்கள் சமாதானமாய் வாழவும் கிருபை செய்யும். இப்படியாக, ஜனங்கள் புது மனமும், சுத்தமும் பெற்று நாகரீகம் அடைவதினல் உம்முடைய ராஜ்யம் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று எங்கள் இயேசு ராஜாவின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

காலை ஜெபம்

எங்களைக் காப்பாற்றி வரும் கடவுளே! சென்ற இராத்திரியில் எங்களுக்கு எந்தவிதமான நாசமோசமும் நேரிடாமல் காப்பாற்றினீர். எங்களுக்கு நல்ல தூக்கமும் இளைப்பாறுதலும் கொடுத்து, இந்தப் புதிய நாளைக் காணச் செய்ததற்குத் தோத்திரம் சுவாமி. நாங்கள் சோம்பல் அடையாமல் வேலைசெய்து சம்பாதிக்கவும், மற்றவர்களுக்கு உதவி செய்யவும் கிருபை செய்யும். நாங்கள் பாவம் செய்யாமல் எங்களைக் காத்துக்கொள்ளும். நீர் விரும்பும் விதமாக நாங்கள் வளர நீர் கிருபைசெய்ய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுவின் மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

மாலை ஜெபம்

இன்று பகல் முழுவதும் எங்களைப் பாவத்திலிருந்தும், ஆபத்திலிருந்தும் விலக்கிக் காப்பாற்றின கடவுளே! கடந்த பகலிலே அதிகக் கஷ்டப்பட்டு வேலைசெய்தோம். சோர்வு

அடைந்த எங்கள் உடலுக்கும் மனதுக்கும் இளைப்பாறுதல் கொடுக்க நீர் இரவை உண்டு பண்ணி இருக்கிறீர். அதற்காக உமக்குத் தோத்திரம் சுவாமி. நாங்கள் தூங்கும்போது எங்களுக்குக் கெட்ட சொப்பனம் வராமலும், பிசாசின் சோதனையும் ஆபத்தும் ஏற்படாமலும் காத்து, சுகமான தூக்கத்தைக் கொடும். அன்பும், சமாதானமும், சந்தோஷமும் எங்களுக்குள் இருக்கச் செய்யும். புது பலமும், திட மனதும் பெற்றவர்களாய் நாங்கள் எழுந்து அடுத்த காலையைக் காண இயேசுவின்மூலம் கிருபை செய்யும். ஆமென்.

மற்றவர்களின் குணப்படுதேலுக்காக ஜெபம்

"மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும். நீங்கள் போய் உலகமெங்கும் சகலருக்கும் நல்ல செய்தியைச் சொல்லுங்கள்" என்று கட்டளை இட்ட இயேசுவே! உம்முடைய கிருபையினால் நாங்

கள் கிறிஸ்தவர்களானேம். ஆனல் எங்கள் சொந்தக்காரர்களிலும், ஜாதி ஜனங்களிலும் அநேகர் உம்மை அறியாதவர்களாய் இருக்கிருர்கள். அவர்களின் கல்லான மனம் கரையும்படிச் செய்யும். இருட்டான அவர்கள் மனதிலே நீர் வெளிச்சம் வீசும். நீர் அன்புள்ள தகப்பன் என்று அவர்களுக்குக் காண்பித்து, அவர்களும் மனந்திரும்பி உம் பிள்ளைகளாகக் கிருபை செய்தருளும் உலக இரட்சகரே. ஆமென்.

பிள்ளைகளுக்காகப் பெற்றேர் ஜெபம்

எங்களுக்காக, தாழ்மையான மாட்டுக் கொட்டகையில் மரியாள் வயிற்றில் பிறந்த இயேசுவே! நீர் எங்களுக்குக் கொடுத்திருக்கும் பிள்ளைகளுக்காகத் தோத்திரம். நீர் பெற்றேருக்கு உதவி செய்ததுபோல இவர்களும் செய்ய நீர் கிருபை செய்யும். பிள்ளைகளை நாங்கள் நல்ல வளர்ப்பில் வளர்க்க எங்கள் வார்த்தையும் நடத்தையும் அவர்களுக்கு முன்மாதிரியாய் இருக்க நாங்கள் பிரயாசப்பட உதவிசெய்யும்.

அவர்கள் சகல நற்குணங்களிலும் கல்வி அறி விலும் ஆத்தும வளர்ச்சியிலும் வளர்ந்து பெரியவர்களாகி உமக்கும் இந்த நாட்டிற்கும் ஊழியம் செய்யக் கிருபை செய்யும் சுவாமி. ஆமென்.

பாவமன்னிப்புக்காக ஜெபம்

பாவிகளை இரட்சிக்க வந்த பரிசுத்த இயேசுவே! பாவிகளாகிய நாங்கள் உம்மண்டை வந்து நிற்கிறோம். நாங்கள் உமக்கும், மற்ற ஜனங்களுக்கும் விரோதமாகப் பாவம் செய்தோம். எங்கள் இஷ்டப்படி நடந்தோம். ஆனாலும் சந்தோஷம் அடையவில்லை. எங்கள் பாவங்களை நீர் வெறுக்கிறீர். ஆனால் அக்கிரமக்காரர்களாகிய எங்கள்மீது இரக்கம் வைக்கிறீர். நீர் அன்பினால் சிலுவையில் இரத்தம் சிந்தி எங்களுக்காக உயிர் விட்டதை நினைக்கிறோம். நாங்கள் உண்மையாய் மனஸ்தாபப் படுகிறோம். எங்கள் பாவங்களை மன்னித்து எங்களை இரட்சியும். நாங்கள் பாவ மன்னிப்புப்பெற கிருபை செய்யும் சுவாமி. ஆமென்.

தோத்திர ஜெபம்

நம் ஆண்டவரைக் கும்பிடுவோமாக. சுவாமி நீர் எங்களை உண்டுபண்ணினதற்காகத் தோத்திரம். எங்களுக்கு அருமையான பிள்ளைகளைக் கொடுத்து இருக்கிறீர்; இவ்வளவு காலமும் எங்களைப் பத்திரமாய்க் காப்பாற்றினீர். இவைகளுக்காகத் தோத்திரம். நீர் உண்டுபண்ணியிருக்கும் நல்ல பொருட்களுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். எங்களை உம்முடைய பிள்ளைகளாக்கிக் கொண்டதற்காக நாங்கள் எதை உமக்குக் கொடுப்போம்? எங்களை உம்மிடத்தில் ஒப்படைக்கிறோம். உமக்கே என்றும் மேன்மை உண்டாவதாக! என்று எங்கள் இயேசு சுவாமியின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

வேலை செய்யப்போகுமுன் ஜெபம்

எங்கள் ஜீவனும் பலனுமாயிருக்கிற இயேசுவே, நீர் இந்த உலகத்தில் மனிதனாய் இருக்கையில் தச்சுவேலை செய்து தாய் தகப்பனுக்கு உதவி செய்தீர். நாங்களும் எங்கள்

குடும்பத்தாரைக் காப்பாற்ற வேலே செய்ய வேண்டும். இன்று நாங்கள் வேலே செய்யும் போது எங்களோடு இரும். உம்முடைய பலத் தினல் எங்கள் வேலேயைத் தொடங்கி, செய்யப் போகிருேம். நாங்கள் செய்யும் வேலேயை நன்ருய்ச் செய்ய உதவி செய்யும். நாங்கள் உழைத்து, எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெறக் கிருபை செய்யும். உமது கிருபை எங்க ளோடிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிருேம் பிரபுவே. ஆமென்.

கர்த்தருடைய ஜெபம்

லூக்கா 11: 1-4. இயேசு சுவாமி ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு அவ ருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி, "ஆண்டவரே எங்களுக்கு ஜெபம் பண்ணப் போதியும்" என்ருன். அவர் பின்வரும் ஜெபத் தைப் போதித்தார்:

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம் முடைய ராச்சியம் வருவதாக. உம்முடைய

சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையிலிருந்து இரட்சித்துக்கொள்ளும். இராச்சியமும் வல்லமையும் மகிமையும் என்றும் உம்முடையவைகளே. ஆமென்.

கலகம் அல்லது யுத்தம் நடக்கும்போது செய்யவேண்டிய ஜெபம்

"ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைத் திருப்பிக்காட்டுங்கள். உங்கள் விரோதிகளுக்கு எப்போதும் மன்னியுங்கள். தீமைக்கு நன்மையே செய்யுங்கள்" என்று சொன்னதும் அல்லாமல் அவ்விதம் செய்தும் காட்டின இயேசு சுவாமியே! யூதர்கள் உம்மை அவமானப்படுத்தி, பின் சிலுவையில் அறைந்தபோது, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்

என்று வேண்டிக்கொண்டது உம் அன்பைக் காட்டுகிறது. இதோ எங்களுக்குள் இருக்கும் சண்டைகளை நீக்கும்; இப்பொழுது நடக்கும் கலகத்திற்கு நாங்கள் காரணராய் இருந்தால் எங்கள் மனதை மாற்றும். எங்கள் விரோதிகள் அநியாயமாகச் சண்டைக்கு வந்தால் அவர்கள் மனதை மாற்றும். விரோதிகள் செய்யும் எல்லா சதிமோசங்களிலிருந்தும் எங்களை விலக்கிக் காத்துக்கொள்ளும் சுவாமி. ஆமென்.

வியாதியஸ்தருக்காக ஜெபம்

எங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் துணைவராயிருக்கும் இயேசுவே! நீர் இந்த உலகத்தில் மனிதனாய் இருந்தபோது அநேக வியாதியஸ்தரை சுகப்படுத்தினீர். விசுவாசத்தோடு உமது அங்கியின் ஓரத்தைத் தொட்ட உடனே, பெருவியாதியுள்ள ஒரு பெண் சொஸ்தமானாள். நீர் இப்பொழுதும் இந்த இடத்தில் இருக்கிறீர். இங்கு வியாதியாய் இருப்பவர்களைப் பாரும். ஆஸ்பத்திரியிலுள்ள வைத்தியர்களும் நர்சு அம்மாள்மார்

களும் அன்பாக உதவி செய்து, மருந்து கொடுத்து வருவதற்காகத் தோத்திரம் சுவாமி. "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" என்றபடி எங்கள் ஜெபத்தைக் கேட்டு, உம் சித்தப்படி இந்த வியாதியஸ்தருக்கு நல்ல சுகம் கொடும் இயேசு சுவாமி. ஆமென்.

மழைக்காக ஜெபம்

எங்களை அன்புடன் காப்பாற்றும் வல்லமையுள்ள சுவாமியே! எங்கள் ஆகாரத்துக்காக விதைத்திருக்கும் தானியங்கள் விளைவதற்கு வேண்டிய மழையைத் தாரும். மழை இல்லாததால் அவை காய்ந்துபோகின்றன. தயவாய் ஏழைகளுக்கு இரங்கி, அவசியமான மழை பெய்யச் செய்ய வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1941. B 7068
1 E. 3 M.